
# ஆத்மஜோதி.



"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்"

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு


எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே – சுத்தானந்தர்


சோதி 5 | விஜய ஹு சித்திரைமாசம் திகதி 1 | சுடர் 6


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மங்கையர்க்கரசியார் வணக்கம் | .... | 141 |
| திரு ஆலய பதிகங்கள் | .... | 142 |
| மாது சிரோமணி | ... | 143 |
| பொன்விளங்காலை புலர்ந்தது | ... | 149 |
| அருட்பா விளக்கம் | ... | 150 |
| பகவத்சேவையின் பயன் | ... | 154 |
| சைவமும் தமிழும் | ... | 157 |
| நாயகி நாயக நெறி | ... | 160 |
| பெயரும் புகழும் | ... | 163 |
| திருவள்ளுவர் திருநாள் | ... | 164 |



## ஆத்ம ஜோதி

❊ ஆயுள்சந்தா ரூபா 75/- ❊ வருடசந்தா ரூபா 3-

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்.- க. இராமச்சந்திரன்
கம் 60டீல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.


ஓம்

# மங்கையர்க்கரசியார் வணக்கம்

மங்கையர்க்குத் தமிழரசி யெங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
யெங்கள்பிரான் சண்பையர்கோ னருளினாலே
யிருந்ததமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்றலாமே —சேக்கிழார்

பூச லயிற்றென்ன னார்க்கன லாகப் பொருமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமாதேவியா மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தா ளருகந்த ருக்குத்தென் னாட்டகத்தே-

—நம்பியாண்டார்நம்பி.

மங்கையர்க்குத் தனிஅரசி வளவர்குலக் கொழுந்து
மன்னவர்சூழ் தென்னவர்க்கு மாதேவியார்மண்
சங்கைகெட அமணர்சமயஞ் சாடவல்ல
சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த
பொங்குதிரு வருளுடைய போத வல்லி
பொருவில்நெடு மாறனார் புயமேல் வாழும்
செங்கலச முலையாள்தன் அருளால் இன்பஞ்
சேர்ந்த ரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்தவாறே.
—உமாபதிசிவாசாரியர்

ஓம்

# திரு ஆலவாய் பதிகங்கள்.

பண்-புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர் கோன் பாவை வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே.

வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையான் உம்பரார் தலைவன் உலகினில் இயற்கையை-
-யொழிந்திட்டு
அற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற ஆலவா யாவதும் இதுவே.

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவாயீசன் திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான சம்பந்தன் செந்தமி ழிவைகொண்டு
இன்னலம் பாட வல்லவர் இமையோர் ஏத்தவீற் றிருப்பவர் இனிதே.

பண்-கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பால்நல்வாயொரு பாலன்ஈங்கிவன் என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே.

எக்கராம் அமண் கையருக்கெளி யேனலேன்திரு ஆலவாய்ச்
சொக்கனென் னுளிருக்கவே துளங்கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமான் தமிழ் நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர் இல்லையே.

-திருஞானசம்பந்தர்.



## சைவம் வளர்த்த

# மாதுசிரோமணி.

[ஆசிரியர்]

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னூறு வருஷங்களுக்கு முன் வட நாட்டிலிருந்து தென்னாடு போந்து ஆதிக்கஞ் செலுத்தப் போட்டியிட்ட மதங்கள் வைதீகம், பௌத்தம், சமணம், ஆசீவகம் என்ற நான்குமாகும். ஆசீவகம் ஒருவிதசெல்வாக்கும் பெறவில்லை; நாளடைவில் சமணத்தின் ஓர் சிறு பிரிவெனக்கருதப்படும் நிலையை அடைந்துவிட்டது. பௌத்தம் முதலிடத்தையெடுத்து சுமார் அறுநூறு வருஷங்கள் போல் செல்வாக்குடனிருந்து வந்தது. கி-பி நான்காம் நூற்றாண்டளவில், உட்பிரிவுகளாலும் குருமார்களின் சீலக்குறைவாலும் அது இழந்த செல்வாக்கை சமணம் தனதாக்கிக் கொண்டு சுமார் முன்னூறு வருஷங்களாக ஆதிக்கஞ் செலுத்தியது, பௌத்தப் பள்ளிகள் சமண ஆலயங்களாக மாறின.

பௌத்தம்: சமணம் இரண்டும் ஒழுக்கமதங்கள்: அஹிம்சையையும் அறிவுப் புரட்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. பழையதமிழ்மரபுக்கிணங்க பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டாதவை. எனவே அவற்றின் கௌரவமும்செல்வாக்கும் காரணமாக, அக்காலத்தமிழர் வழக்க ஒழுக்கங்கள் பெரும் மாறுதல் அடைந்தன; அவர்களின் உள்ளத்தில் புதிய கருத்துக்கள் உதயமாயின. குருமார்களின் வடமொழிப்புலமையும் தர்க்க சாஸ்திர அறிவும் வாக்குவல்லமையும் படித்த தமிழர்களின் கவனத்தை ஈர்த்தன; அன்னாரின் கடுநோன்புகளும் மந்திர தந்திரங்களும் பாமரமக்களிடையே மதிப்பை உண்டாக்கின. நாட்டு மொழியாகிய தமிழைப் பயின்று பாண்டித்தியம் பெற்று தமது கொள்கைகளைப் பரப்பினர். தமிழில் புது இலக்கியங்கள் தோன்றின; தமிழர்களின் கலைச்செல்வம் பெருகியது.

"இருட்பார வினைநீக்கி எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரம் தனிசுமந்த அன்றுமுதல் இன்றளவும்,
மதுவொன்றும் மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுஅன்றி நினக்குரித்தோ? புண்ணிய! நின்திருமேனி!"

என்பது போன்ற உளத்தை உருக்கும் பாடல்கள் புத்ததேவர், மஹாவீரர் இருவர்மீதும் இயற்றப்பட்டன. [தென்னாடு வந்து எழுநூறு வருஷங்கள் கழிந்தும் வைதீகமதம் பொது மக்களின் ஆதரவைப் பெறுமைக்குப் பலகாரணங்கள் உள. முதலாவது யாகத்தால் உயிர்க்கொலை; இரண்டாவது; பிராமணர்களே வேதம் படிக்கலாமென்ற குறுகிய கோட்பாடு' மூன்றாவது; சாதித்துவேஷங்கள். பௌத்தம் தாழ்ந்து சமணம் முன்னேறிய காலத்தில்தான் வைதீகமதம் தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றி, திராவிடதெய்வங்களான சிவன், திருமால், முருகன், கொற்றவை முதலானவற்றை ஏற்றுக்கொண்டதெனலாம். இந்த முறையில் தென்னாட்டிலிருந்த பழைய சைவ வைஷ்ணவ மதங்கட்கும் வடநாட்டு வைதீக மதத்திற்கு மிடையே சமரஸ மனப்பான்மை தோன்றியது பல்லவ மன்னர்களின் காலத்திலாகும். "மத்த விலாஸம்" என்னும் வடமொழி நாடகத்தின் மூலம் அக்கால பௌத்த மதத்தின் கேவல நிலையை பரிகாசம் பண்ணிய மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து சைவனானவன். அவனது தந்தையான சிம்ம விஷ்ணுவும், புத்திரனான நரசிம்மவர்மனும் சமணத்தையோ சைவத்தையோ சேரவில்லை; வைஷ்ணவர்களாகவே வாழ்ந்தார்கள் அவர்கள் காலத்தில் சைவ-வைஷ்ணவ வேற்றுமை, சண்டை எதுவும் இருக்கவில்லை. பல பல்லவர்கள் இவ்விரு சமயங்கட்கும் ஒரேவித ஆதரவுகாட்டியுள்ளார்கள்: நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றியதும், ஆதிசங்கரர் அவதரித்து அத்வைதநெறியைப் பரப்பியதும் அவர்கள் காலத்தில்தான்.

வேதங்களின் ஞானபாகமான உபநிடதங்களின் பிறப்பிடம் வடஇந்தியா. அந்த நூல்களுக்கு உரைகண்டோர் சங்கரர், ராமானுஜர் முதலியோர். அவற்றைத்தமிழில் கலையாக்கி உரையும் தந்து உபசரித்த பெருமை சிவனடியார்களான நாயன்மார்களையும் வைஷ்ணவபக்தர்களான நம்ஆழ்வார் முதலான ஆழ்வார்களையுஞ் சேர்ந்ததாகும். இவர்களது பாடல்களில் நாம் காண்பது



உபநிடத சாரம் மாத்திரமல்ல; அதனை வாழ்க்கையில் பிரதிபலிக்கச்செய்துசொண்ட இதயத்தையுமாகும். தர்க்கசாஸ்திரங்களாலும், மந்திரதந்திரங்களாலும், ஒழுக்கத்தைக் குறித்த உயர்ந்த லட்சியங்களாலும் அறிவைப் பிரமிக்கச்செய்த பௌத்த சமண மதங்கள் மேற்கூறியவிதத்தில் மக்களுடைய இதயத்தோடு உறவு வைத்துக் கொள்ளாமையால், அவர்களின் ஆத்ம தாபத்தையும் தாகத்தையும் போக்க முடியவில்லை, அடிப்படையான ஒழுக்கநிலை சீர்கெட்டதும் க்ஷீணகதி அடைந்ததில் வியப்பொன்றுமில்லை.

நமது வாழ்க்கையாகிய நீண்டயாத்திரைக்கு ராஜ பாதை கண்பிடுத்துதவிய நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் பக்தியே பாட்டாகிக் கலையாகிப் பின்னர் சோழபாண்டிய மன்னர்கள் காலத்தில், யாம் இன்று கண்டு வியப்புறும், பிரம்மாண்டமான கோயில்களாயிற்று என்று சொல்லலாம். அவர்கள் கோயில்களில் கண்டுவழிபட்ட அன்புக் கடவுளை கோயிலாகவும் கண்டார்கள், உலகமாகவும் உயிர்களாகவும் கண்டார்கள்! காவிரி, வைகை; தாமிரபருணி ஆறுகளின் புதுவெள்ளம்போலப் பெருகிய அவர்களின் ஒரே பக்திப்பிரவாகம் சைவம் வைணவம் என்ற இருநதிகளாக ஓடி தமிழ்நாட்டின் சமயத்துறையில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

நாயன்மார் அறுபத்துமூவர்; ஆழ்வார்கள் பன்னிருவர். இவ்விரு அடியார் திருக்கூட்டங்கள் இறைவன் சந்நிதியில்எவ்விதசாதிவித்தியாசத்திற்கும் இடமேயில்லை என்ற உண்மைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கின, அப்பூதியடிகள் நாவுக்கரசரைக் குருவாகவும் தெய்வமாகவும் போற்றியதுபோலவே. பிராமணரான மதுரகவியாழ்வார் நாவுக்கரசரின் குலமான வேளாளசாதியைச் சேர்ந்த நம்மாழ்வாரை வழிபட்டார். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் பதினேழுபேர் இடையர், பாணர், வேடர், புலையர்முதலாய சாதிகளைச்சேர்ந்தவர்கள். அதற்கு அடுத்த பெருந்தொகையினர்வேளாளராவர். நாயன்மார்களுள் முப்பத்திரெண்டுபேர் சிவலிங்க வழிபாட்டால் முத்திபெற்றவர்; பத்தொன்பது பேர் சிவனடியாரை வழிபட்டு முத்தியடைந்தவர்; எஞ்சிய பன்னிருவரும் குருவருளால் முத்திபெற்றவர்கள். தேவாரம்பாடியமூவரும்

திருமந்திரம் அருளிய மூலரும், பாண்டிமா தேவியாரும் இந்த மூன்றும் பிரிவைச் சேர்ந்தவர்களாகும், இப்பன்னிருவர் புராணங்களுள் குருபக்தியின் பெருமை தனிச்சிறப்புடன் விளங்குவது அப்பூதியடிகளதும் மங்கையர்க்கரசியாரதும் வரலாறுகளெனலாம்,

சேக்கிழார் பெருமான் மங்கையர்க்கரசியார் புராணத்தை மூன்றே மூன்று படல்களில் முடித்துவிட்டார். பாண்டிமா தேவியின் பெண்மை, தாய்மை, இறைமையாம் மூன்று பெருந்தன்மைகளையும் சைவமங்கையர் கடைப்பிடித்தொழுகிப் பிறவிப்பயனைப் பெறும்பொருட்டு நித்திய பாராயணஞ்செய்ய இந்த மூன்றுவிருத்தங்களும் போதும் என்பது தொண்டர் சீர் பரவுவாரின் கருத்துப்போலும்! உண்மையில், இம்மூன்றும் தனித்தனியே செப்பஞ்செய்யப்பட்ட ஒப்பற்ற மணிகளாகும். வளவர் திருக்குலக் கொழுந்தின் திருமணத் தொடர்பால் பாண்டிநாடு பரிசுத்தமெய்திய வரலாற்றை விபரமாக திருஞானசம்பந்தர் புராணத்தில் ஏறக்குறைய முன்னூறு பாடல்களில் கூறிவிட்டு, அவற்றின் சாரத்தை, பாட இனிதாயும், கேட்க இனிதாயும், உணர இனிதாயுமுள்ள மூன்றுபாட்டில் அமைந்த அழகு சேக்கிழாரின் தெய்வப்புலமைக்குத் தனிச்சிறப்புத்தரும் அங்கமாகும். இனி திருஞானசம்பந்தர் புராணங்கொண்டு, தென்னர் குலப்பழி தீர்க்கதெய்வப்பாவையின் சைவத்தொண்டையும்குருபக்தியையும் சிறிது ஆராய்வோம்.

தமிழ்நாடாகிய பாண்டிநாட்டின் புகழ்பெற்ற பதிகளிலெல்லாம் சமணக்கோயில்களும் பள்ளிகளுமே மலிந்திருந்தனவென அந்நாட் சமய நிலையை விபரிக்க ஆரம்பித்த சேக்கிழார்,

"வரிசிலைத்தென்னவன்றானுய்வதற்குவளவர்கோமான்
திருவுயிர்த்தருளுஞ்செல்வப்பாண்டிமாதேவியாருங்
குரைகழலமைச்சனாராங்குலச்சிறையாருமென்னு
மிருவர்தம்பாலுமன்றிச்சைவமங்கெய்தாதாக."

என்றபாட்டில், பாண்டியன் உய்வதற்கென்றே சோழராசா பெற்றெடுத்தருளிய திருமகளார்என்பதையும், அரசன்தான் செய்யவே



ண்டிய சமயப்பாதுகாப்பாகிய கடமையில் தவறிவாழ, அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும் புறமதஞ்சேர, சைவம் தனக்குப் பற்றுக்கோடாகக்கொள்ள வேறிடமின்றி வாட, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாருமே சைவப்பயிரினுக்குப்புகலிடமாய் நின்றனர் என்ற கருத்தையும் விளக்கியுள்ள அருமையை உற்றுநோக்குக.

இன்று ஒரு பெரியார் ஓர் நகரத்திற்கு விஜயஞ்செய்யும்போது, அவருக்குத்தக்க மரியாதையளிக்கத் தீர்மானஞ்செய்யும் நகரசபை அவரை முதலில் வரவேற்பது தங்கள் நகரத்தின் எல்லைப்புறத்திலாகும். இதேவழக்கம் பழந்தமிழ் நாட்டில் இருந்ததென்பதை,

"இங்கெழுந்தருளும் பெருமை கேட்டருளி
யெய்துதற்கரிய பேறெய்தி
மங்கையர்க் கரசியாரு 'நம்முடைய
வாழ்வெழுந்தருளிய' தென்றே
'யங்குநீ ரெதிர் சென் றடிபணிவீ' ரென்
றருள் செய்தார்" என, சம்பந்தப்பெருமானை

மதுரை மாநகரின் எல்லையில் சந்தித்து வணங்கிய மந்திரி குலச்சிறையார் வாக்கால் அறிகின்றோம். இருவரும் ஏனைய அடியார்களும் திருவாலவாய்க்கோயிலை நோக்கிச்செல்லும்போது, அக்கோயிலின் கோபுரம் தென்பட்டதும் ஆளுடையபிள்ளையார் மண்டு பேரன்பால் மண்மிசைப்பணிந்து 'மங்கையர்க்கரசி' யென்றெடுத்த 'எண்டிசைபரவும் ஆலவாயாவதுமிதுவே' என்று முடித்த முதலாவது திருப்பதிகத்திலேயேபாண்டிமாதேவி, குலச்சிறை நாயனார் ஆகிய இருவரின் பணிகளையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பதிகம் பகல்பண்களுள் ஒன்றான புறநீர்மையில் அமைந்துளது. விடியற்காலத்தில் திருப்பள்ளியெழுச்சிக்குரிய இராகமான பூபாளம் இந்தப்பண்ணைச்சார்ந்தது.எனவே, பிள்ளையார் திருவாலவாய்க்கோயிலை அடைந்த நேரம் விடியற்காலம் என்பது வெளிப்படை. அதுவுமன்றி, பாண்டிநாடும், தமிழ்நாடும், சைவமும் புத்துயிர் பெற்றுச் சிறப்படையச் செய்த இப்பதிகத்தின் பண் அமைப்பில் வேறுமோர் அருங்கருத்து அடங்கியுள்ளது

அதாவது, புறச்சமய இருள்நீங்கி சிவநெறிப்பிரகாசம் உதயமாகும் வேளை கிட்டிவிட்டதென்பதாம். (தொடரும்)

"மண்பரவு சீகாழிக் கவுணியர்தங்
குலவாழ்வை மறையோர் தேவை
விண்பரவு பெரியநா யகிஞானங்
குழைத்தூட்ட விரும்பி யுண்டு
பண்பரவு தமிழ்வேதம் பாடியவெம்
பெருமானைப் பரம ஞான
நண்பருளி யடியாரை யாண்டருள்வள்ளலைப்பணிந்து நலிவுதீர்வாம்"

[குறிப்பு:- பதுஆண்டில் நாயன்மார்களின் குருபூஜை நட்சத்திரங்கள் மங்கையர்க்கரசியாரின் திரு நாளான சித்திரை ரோகிணியை (17-4-53) முதலாவதாகக் கொண்டுள்ளது. சித்திரை மீ 26ஞ (8-5-53) அப்பர் சுவாமிகள் திருநாளாகும்]

---

## அஞ்செழுத்துண்மை.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதநாம நமச்சி வாயவே.

கொல்வாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத்தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார்நாம நமச்சி வாயவே.

---



## பொன்னிளங் காலை புலர்ந்தது.

புத்தெழில் ஞாயிறு பூத்தது; —பசும்
பொன்னிளங் காலை புலர்ந்தது!—கோடி
சுத்தானந் தக்கதிர் வீசுது;—ஆத்ம
ஜோதிவெள் ளமெங்கும் பாயுது;—ஜாதிப்
பித்த மயக்கம் கலைந்தது;—மத
பேத இருளும் தொலைந்தது;—ஜன
சக்தி துயில்விட் டெழுந்தது —தொழிற்
சங்க நாதங்கள் முழங்குது!

பழமை மணிச்சுடர்க் கன்னியர் —புதுப்
பரிதியில் பாய்ந்து கலந்தனர்;—பல
அழகுக் கலைக்கம லங்களும்,—காதல்
அமிழ்தஞ் சுரந்து விரிந்தன,—இள
மழலைக் கவிப்புள்ளி னங்களும் —இதழ்
மலரைத் திறந்திசை சிந்தின;—நாமும்
எழில்மிக்க புதுயுக ஜோதியில்,—குளித்
திணையற்ற புதியவாழ் வெய்துவோம்!

மெய்த்தவர் போற்றிப் பணிந்திடும்;—தூய
வித்தகச் செந்தமிழ்த் தாயினை-தனில்,
புத்தப் புதுமைக் கவிமலர்—மது
பொங்கச் சொரிந்து வணங்கியே—என்றும்
சுத்த சுதந்திர வீரராய்;—அன்பு
தூய்மை, நல்வாய்மை துலங்கிடத்—திகழ்
பத்துத் திசையும் தமிழ்ப்புகழ்—மண்டிப்
பாய்ந்து செழிக்கப் பணிசெய்வோம்!

—"பரமஹம்ஸதாசன்"

# அருட்பா விளக்கம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

மனமாயக்கடலைக் கடந்தார்; இருவினைக் கரைகளைத் தாண்டினார்; உள்ளக்கோயிலைக் கண்டார். சித்தத்திரை விலகியது. ஆன்மக்கதவு திறந்தது: அருள் விழி திறந்தது. தெய்வக்காட்சிகள் புலனாயின. சிவத்தியானத்தில் அன்பமுதுண்டார். அருள் ஒளி நிறைந்தார். அனைத்தும் அருளால் அறிந்து அழியாநிலை பெற்றார் வள்ளலார்; "ஆத்மனா விந்ததே வீர்யம் வித்யயா விந்ததே அம்ருதம்" என்பது வேதவாக்கு. தன்னறிவால் வீறு பதியறிவால் அழியாமை வரும். இந்நிலையில் யோகசுதந்தரம், போகசுதந்தரம் ஆத்மசுதந்தரம் தேகசுதந்தரம் எல்லாம் பொது நடச்சித்தனுக்கே அர்ப்பணமாயின,

என்றும் இருப்பதனில் என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு

இதுதான் சாகாக்கலை. தான்பெற்ற இன்பத்தை இனி உலகும் பெற வள்ளலார் முயன்றார். அதுதான் அருள்விளக்க மாலையாகி உலகை அழைத்தது.

பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பியருட்
சோதி யளித்தென் உள்ளகத்தே சூழ்ந்துகலந்து துலங்குகின்றாய்
நீதிநடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேறை
ஓதி முடியாது என்போல்இவ் உலகும் பெறுதல் வேண்டுவனே.

## சன்மார்க்க சங்கம்.

சென்ற நூற்றாண்டில் பாரதநாடு அன்னிய மாயத்தால் அறமிழந்து அல்லற்பட்டது. நம்மைத் தட்டியெழுப்ப அரிய பெரியார் எழுந்தனர். வடக்கே தயானந்த ஸரஸ்வதி வேதச் சிங்கம் போல் எழுந்து சத்தியார்த்தப் பிரகாசம் அளித்தார். 1875-ல்



ஆரியசமாஜம் நாட்டி தூய வேதஉண்மைகளை விளக்கினார். மூடக்கொள்கைகளைக் கண்டித்தார். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளி உபாசனையால் சக்தி பெற்று, சமாதியால் அறிவுபெற்று, சிறுகதைகளாலும் உதாரணங்களாலும் தெய்வ ஞானத்தை விளக்கினார். 1892-ல் தான் விவேகானந்தரால் அவர் உள்ளம் ராமக்கிருஷ்ண சங்கமாக உருக்கொண்டு உலகெல்லாம் பரவியது. 1875-ல் பிளாவட்ஸ்கியும் ஆல் காட்டும் பிரமஞானசபை நாட்டி எல்லாச் சமயங்களும் அதில் வளரச்செய்தார். தென்னாட்டில் ஆறுமுகநாவலர் சைவசமாஜம் அமைத்துச் சிவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்தார். ஆனால் வள்ளலாரோ யாரும் செய்யாத அற்புதங்களைச் செய்தார், அருட்பாவே ஆச்சரியமான அற்புதம், அவர் நோய் பேய்களை ஓட்டியதும், பொன் விளைத்ததும். பாம்புவிஷம்தீர்த்ததும், ஒரே சமயம் பல இடங்களில் இருந்தும் ஊணுறக்கமின்றி துரியநிட்டை கூடியதும் சித்திகளே:

புண்படா உடலும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும் நின்றனையே
கருத்தில் வைத்து ஏத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

என்று அருட்சார்பில் வாழ்ந்தார். காசையும் பணத்தையும் கன்னியர் தமையும் காணியின் ஆட்சியும் கருதிலாது நேசமெல்லாம் சிவநேசமும் காமமெல்லாம் சிவகாமமுமானார். தாம்கண்ட பேரின்பத்தை அருட்பெருஞ்சோதியை உலகும் கண்டு தனிப்பெருங் கருணையான இறைவனுடன் கூடிவாழலே சன்மார்க்கம்; இறைவன் சுத்தன் அவனருள் சக்தி. அவனை அடையும் வழி சத்தியம். சத்தியவழியே நின்றால் சன்மயமான நின்மலப்பொருளை அடையலாம். தன்னுள் அதைப்பெற்றால் தன்னுள் ஒருமை கண்டால் உலகிலும் காணலாம்.

உள்ஒன்றி னாலே உலகோன்றும் ஆதலினால்
உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்று.

இந்த ஒற்றுமைதான் ஆன்மநேயம் என்பது.

அகிலவாழ் வத்தனையும் ஆன்ம விரிவாக
நிகழுவதே உண்மை நிறைவு.

மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்
ஆன்மஒருப் பாட்டுரிமையால்

ஒன்றே உயிருலகம் ஒன்றே உலகிறைவன்
ஒன்றே இறைவன் உறையுள்.

இந்த ஆன்ம ஒருமையை உலகிற் பரப்பி உலகமெல்லாம் சத்திய ஞானசபையாக்கி, மனிதரெல்லாம் சுத்த சமரஸ சன்மார்க்கத்தில் வாழச்செய்யவே வள்ளலார் எழுந்தார். அதற்கு வேண்டிய சாதனமுறைகளைத் தாமே பயின்று உலகிற்கும் வகுத்துக் காட்டினார்,

துரிய மேற்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரியதோர் அருட் சோதியைப் பெறுதலே எவர்க்கும்
அரியபேறு; மற்றவையெல்லாம் எளியதே அறிவீர்
உரிய இம்மொழி மறைமொழி சத்தியம் உலகீர்.

[வரையும்
அகத்தே கறுத்துப் புறத்தேவெளுத்திருந்த உலகர் அனை
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற்கென்றே எனை இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப்பெற்றேனே.

வானரசு உன்னுள் அதைப்பெறு, பரமபிதாபோல்பூரணனாயிரு என்றார் ஏசுநாதர். அவர் சிலுவையேறிப் பல்லாண்டுகளுக்குப்பின் பைபிள் எழுந்தது. சர்ச்சு எழுந்தது. கிறிஸ்துமதம் எழுந்தது. அது உலகைக் கவர்ந்தது. புத்தர் தியானத்தால் மனதைவென்று நிராசை வழியைக்காட்டினார். புத்தசங்கம் எழுந்து புத்தனையே தெய்வமாக போற்றிப்பணிந்தது. புத்தமதம் இன்று



உலகைக் கவர்ந்துள்ளது, இவைதமூலம் இந்துமதம் பலருக்குத்தெரிந்தது. ஆனால் அப்பரும் தாயுமானாரும் வள்ளலாரும் மெய்கண்டாரும் போற்றிய சுத்த சன்மார்க்க சிவாத்துவிதம் இன்னும் தமிழருக்கே விளங்காமல் இருக்கிறது. உலகின் அருட்பெரியாருள் மிகப்பெரியார் வள்ளலார். அவர் அருட்பெருஞ்சோதி சித்திபெற்று தனிப்பெருங்கருணையாகி மனிதசமுதாயத்திற்கே சன்மார்க்க ஒளி காட்டினார், சன்மார்க்க சங்கத்தை வடலூரில்கூட்டமுயன்றார். தான்என்ற முனைப்பேயின்றி எல்லாம் இறைவன் என்ற உணர்வுடன் பணிவுடன்வாழ்ந்தார். அவர் வாக்கைக்கேளுங்கள்:

தங்கமே யனையார் கூடிய ஞான சமரஸ சுத்தசன்மார்க்கச்
சங்கமே கண்டுகளிக்கவும், சங்கம்சார்ந்திடும் கோயில்கண்டிடவும்
துங்கமேபெருஞ்சற் சங்கநீடூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமேகுளிர்ந்து நின்றனைப்பாடி ஆடவும் இச்சைகாண் எந்தாய்

ஆணவம் கொண்ட உலகில் இத்தகைய அருள்வாக்கும் சித்தியும் இருந்தால் தம்மையே கடவுள், தமக்கே வணக்கம். தம்மைச்சரண் புகலே புகல் என்று பறையடித்துப் பொருள் குவித்துப் போக போக்கியங்களை உண்டு இறுமாப்பர். பிறரை மதிக்க மாட்டார்கள். அப்படிநான் பலரைக்கண்டிருக்கிறேன். வள்ளலாரின் தனிப்பெருமை அருட்பெருமை.

எல்லாம் அவனுடைமை எல்லாம் அவனாணை
எல்லாம் அவன் செயலென் றெண்.

நானேயோ தவம் செய்தேன். சிவபிரான் தானாக வந்தென்னையாட்கொண்டான் என்னும் மாணிக்கவாசகர் போலவே வள்ளலாரும் என்பேச்சு செயலெல்லாம் சிவன்பேச்சு செயல்—என்பெருமையில்லை எல்லாம்அவன் பெருமை என்கிறார்

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல்வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நான்—ஏனுரைப்பேன்
நானார்? எனக்கெனஓர் ஞானவுணர் வேதுசிவம்
ஊனாடி தில்லா வழி?

தொடரும்.

ஓம்

# பகவத் சேவையின் பயன்.

தென்னாபிரிக்கா டர்பன் திரு ச. மு. பிள்ளை அவர்கள்

"இந்த உலகத்தை மேல் நாடுகளென்றும், கீழ் நாடுகளென்றும் பிரிக்கின்றனர் சிலர். பகவத்சிருஷ்டியில் அப்பேர்ப்பட்ட பிரிவினைகளொன்றையும் காணோம். உலகத்தில் கீழ்நாடுகள் எந்த இடத்தில் ஆரம்பமாகிறது. எந்தஇடத்தில் முடிவு பெறுகிறது சொல்லுங்கள் பார்ப்போம்."

மானிட சமுதாயம் ஒன்றேதான். அதை இரண்டாகப்பிரிப்பது புத்தியின்மை. கீழ் நாட்டுமக்களுக்கு ஓர் சத்தியம், மேல் நாட்டு மக்களுக்கு மற்றொரு சத்தியமென்பது உண்டா? சத்தியமென்பது மக்களனைவருக்கும் பொதுவானதல்லவா? மனித சமூகத்திற்கு ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களில் வித்தியாசமொன்றுமில்லையே! மேல்நாட்டுமக்கள் எவ்வாறு கஷ்டப் படுகின்றனரோ, அவ்வாறே கீழ்நாட்டு மக்களும் கஷ்டப்படுகின்றனர் அல்லவா? கீழ்நாட்டுக் கஷ்டங்கள் என்றும், மேல்நாட்டுத் துன்பங்கள் என்றும் இருக்கின்றனவா?

மனிதசமுதாயத்திலே ஆசார அனுஷ்டானங்களிலும் பழக்கவழக்கங்களிலும், மற்றும் சில அற்பவிஷயங்களிலும் மேல் நாட்டினருக்கும் கீழ்நாட்டினருக்கும் வித்தியாசமிருக்கலாம். ஆனால் வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்களிலும், மக்களின் எண்ணங்களிலும் வித்தியாசமிருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே. மேற்சொன்ன தத்துவத்தைமனதில் வைத்துக்கொண்டு உலகத்திலுள்ள மக்களனைவரும் ஆத்மீக யோகத்தில் ஈடுபட வேண்டும். இந்த உடலைத் தீனிபோட்டு கொழுக்கச்செய்கிறோம். அப்பேர்ப்பட்ட உடலை பகவத் சேவையில் ஏன் ஈடுபடுத்தக் கூடாது? ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் பகவான் அந்தர்யாமியாக இலங்குகிறார். அப்பேர்ப்பட்ட பாகவதர்களுக்கு தொண்டாற்றுவது பகவத்சேவையாகாதோ?



உணவு ஊட்டிப்பெருக்கிய இந்த உடலை மாத்திரம் பாகவத சேவையில் ஈடுபடுத்தினால் போதாது. கல்வியிலும் நமக்குக் கிடைத்திருக்கும் அறிவையும் மானிட சமுதாயத்திற்கே பிரயோஜனப்படுத்த வேண்டும், நம்முடைய ஆத்மாவையும் அர்ப்பணம் செய்துவிடவேண்டும். அவ்வாறு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தவர்களுக்கும் பகவத் தரிசனம்கிடைக்கும்.

இந்த உலகத்தில்நாம் எவ்வாறு வாழ வேண்டுமென்பதைக் காட்ட நமக்கு திருஷ்டாந்தங்களுக்குக் குறைவேயில்லை. நம் நாட்டில் எத்தனையோ மகான்கள் அவதரித்து நேரில் வாழ்க்கையை நடத்திக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழியை நாம் பின்பற்றினால் போதும்.

இந்த ஜன்மத்தில் இந்த க்ஷணமே மகான்கள் காட்டிய வழியைக் கடைப்பிடிப்போமாக! ஆனால் நாம் பிரதிக்ஞை செய்துகொண்டு செய்யப்போகும் பிரயத்தனம் பலிக்குமா! போராட்டத்தில் வெற்றி நமக்குக் கிடைக்குமா என்று தயங்கவேண்டாம். போராட்டத்தைத் துவங்குவோம். இந்த ஜன்மத்திலே வெற்றி பெறுவோம். இல்லையெனில் அடுத்த ஜன்மத்தில் வெற்றி கிடைப்பது திண்ணம்.

இந்த ஜென்மத்தில் நாம்செய்த போராட்டமெல்லாம் வீணாகி விடாது. இந்த போராட்டத்தின் பலன்களனைத்தும் அடுத்த ஜன்மத்தில் நமதுபொக்கிஷமாக இருந்து போராட்டத்திற்கு அனுகூலம் செய்யும்.

இந்த உடலுக்கு இன்பமளிப்பது பகவத்சேவை ஒன்றுதான். பகவானை நினைத்து, அவன்பொருட்டுச் செய்யும் காரியங்களிலே தான் இன்பம் திகழும்.

மொகலாயச் சக்கரவர்த்தி அக்பர் காலத்தில் நடந்ததாக ஓர் இனிய கதை சொல்வதுண்டு, அது உண்மையாக நடந்த சம்பவம். சக்கரவர்த்தி அக்பர் சமஸ்தானத்திலே "தான் சேன்" என்னும் சங்கீதவித்துவான் இருந்தார், அவர் ஒரு நாள் ஒருகாட்டில் மெய்மறந்து பாடிக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில்

அக்பர் சக்கரவர்த்தி அவ்வழியாக வரநேர்ந்தது. அந்த தெய்வீகமான அற்புத கானத்தைக் கேட்டு பிரமித்துப் போய்விட்டார்.

அந்த மோகனகானம் வரும் திசையை நோக்கி சென்றார் சக்கரவர்த்தி. சற்று தூரம் சென்றதும் தன்னுடைய சமஸ்தான வித்வான் ஒருமரத்தடியில் உட்கார்ந்து கொண்டு மெய்மறந்து பாடுவதைக் கண்டார். சக்கரவர்த்தி அந்த பாட்டைக் கேட்டு சொக்கிப் போய்விட்டார். அச் சமயத்தில் சக்கரவர்த்தியின் மனதிலே கோபமேற்பட்டது. நிர்மானுஷ்யமான இந்தக் காட்டிலே கந்தர்வகானம் செய்யும் இவன், நம்முடைய சமஸ்தான கொலு மண்டபத்திலே இவ்வாறு பாடாமல் வஞ்சனை செய்கிறானே." என்று அவர்மீது வெறுப்பும் கோபமும் கொண்டார்.

சக்கரவர்த்தி, அந்தவித்வானை நோக்கி, "இவ்வளவு அமோகமாக என்னுடைய அரண்மனையில் ஒரு நாள் கூட பாடியதில்லையே! அதன் காரணம் என்ன, சொல்?" என்று கோபத்துடன் கேட்டார்.

"சக்கரவர்த்தி, பிரபுவே, தங்களைவிட பெரியார் ஒருவருக்கு இப்போது பாடுகிறேன். ஆகையால் அரண்மனைப்பாட்டை விட விசேஷமாக இருக்கிறது," என்றார்.

"என்னைவிட பெரியவரா! அது யார்?" என்று அக்பர் கேட்டார்.

"என் கருத்தினுள்ளே இலங்கும் என் மனமோகனன்; என் ஆண்டவன், என்னை ஆட்கொண்டவன். உன்னைவிட பெரியவன். நான் உன்னிடம் பணம் பெற்று கூலிக்குப்பாடுகிறேன், பாட்டும் அதற்கேற்ப இருக்கிறது, ஆனால், இந்த உலகத்தைப் படைத்த என் கண்ணன்; என்னப்பன்; என் அய்யனுக்குப் பாடும்போது குளிர்ந்தஎன்மனம் மலர்ந்து அதிலிருந்து சங்கீதம் கிளம்புகிறது," என்று கூறினார்.





# சைவமும் - தமிழும்.

—○[குக. ஸ்ரீ குகானந்தவாரி]○—

"உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலிய புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளர் வயற்புகலித் திருஞான சம்பந்தன்
பாதமலர்த் தலைமேற்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி"

"உலகெலாம் வாழ்ந்திட உயிரெலா முணர்ந்திட
அலகில்சீர் அடியர்கள் அருள்பெற் றோங்கிட
சைவமுந் தமிழுந் தனிப்பொரு ளுண்மையும்
தெய்வத் திருவருட் டிறத்தினாற் றிகழ்ந்திடும்"

"ஆத்ம ஜோதியே அரும்பணி யாற்ற
அருளறங் கொண்டு வருக முன்வருகவே"

———

தமிழும்-சைவமும் திருமுறைப் பெருமைகளுநம் விளக்கி நன்மை தருவதற்குரிய காலம் இப்போது தோன்றிவிட்டது. சைவப்பணியும் தமிழ்ப்பணியும் தனித்தனியாகப் பெரியோர்கள் செய்துவந்த சேவைதனை அங்கங்கு இருக்கும் மடங்களும் சபைகளும் இன்னுஞ்சில பத்திரிகைகளும் செய்யத் தொடங்கிவிட்டன.

தமிழ்:- தமிழ் மொழி இது நிரம்பிய இலக்கண வரம்புடைய மொழி. தூயமொழி, பழையமொழி, தெய்வமொழி, தெய்வத்தால் வளர்க்கப்பட்ட மொழி, தெய்வத்தைக் காட்டும் மொழி. இதனை "ஞானமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்று பாராட்டினர் சேக்கிழார் சுவாமிகள். அக்கருத்தைப் பின்பற்றியே கம்பரும், "நீண்டதமிழால் உலகை நேமியினளந்தான்" என்று தமிழ் முனிவராகிய அகத்தியனார் தமிழினால் உலகங்களையெல்லாம் அளந்து நிலையிட்டனர் எனப்போற்றினர்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாய் இறைவனுக்கு ஆளாகும் நெறியில் மக்களைச் செலுத்தவல்ல மொழியென்று அத்தன்மையையே குறிப்பித்தும் சிறப்பித்தும் அருளினர் திருநாவுக்கரசர். அதுவே தமிழின் சிறப்பிலக்கணமுமாகும். ஆகவே இதையே தமிழ்நாடென்கிறோம், "மாதவம் செய்த தென்திசை" என்றருளினார் தெய்வச்சேக்கிழார். சைவமும் தமிழும் தனிப் பொருண்மையும் தெய்வத்திருவருட் டிறத்தினால் திகழ்ந்திடும்.

சைவம்:- இனி முழுமுதற் கடவுளாகிய பரமசிவனால் அருளிச்செய்யப்பட்ட சமயம் சைவமாம். இனித் தமிழின் அந்தச்சிறப்பினால் அறியப்படுகின்ற சைவத்திறத்தைப் பற்றி எண்ணுவோமானால், சிவனுடன் சம்பந்தமாயது சைவம் என்பர். சிவன் அநாதியாயுள்ளவன். காலங்கடந்தவன் ஆதலின் அவர் சம்பந்தமும் அநாதி; அந்த அறிவை வெளிப்படுத்தும் இறைவனது வாய்மொழிகளும், பழங்காலத்தன. இதை திருமூலநாயனார் சரித்திரம் நன்குவிளக்கும்.

இறைவன் ஒருவனுண்டு அவனால் அருள் செய்யப்படும் உயிர்களும் உண்டு; அந்த உயிர்களைப்பற்றிய பாசமாகிய நோயுமுள. அந்த நோயைத் தீர்க்க இறைவன் உயிர்களுக்கு உடம்பு கரணங்கள் முதலியவற்றையெல்லாம் உலகபோகங்களையும் தருகின்றான். இறைவனை இன்னின்னவகையால்உணர்ந்து அடையலாம். அவ்வாறு அடைந்தால் இன்னின்ன பயன் என்பனவெல்லாம் அவன் வாய்மொழிகளாகிய ஆகமங்கள் பேசும். அவற்றை நம் பொன்மொழியில் உரைப்பன, மெய்கண்ட சரித்திரங்களும் திரு



முறைகளுமான முன்னே குறித்தபடி உலகத்தையும் உயிர்களையும் அவற்றுக்கு அருள்புரியும் இறைவனையும் அளந்து நிச்சயிக்கும் பான்மையுடையது சைவம். சைவத்துக்குரிய இறைவன் சிவபெருமான்.

சைவசமயமானது மக்களுடைய இகபரசுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்களெல்லாவற்றையும் அவர்களுக்குக் குறைவறக்கொடுக்கும் சர்வசத்த பிரம்மரூபமான ஒரு கற்பக தருவேயாகும். சைவசமயமானது பலசமயங்களிலும் கண்ட முடிவுகளைத் தனக்குடன்பாடாகக்கொண்டு அவ்வம் முதலுக்கும் பலனுவளதெனக்கூறி நிச்சயிக்கும்நெறியுடையது. சைவசமயமானது மற்ற சமயங்களைவிரோதியாது ஒருவன் அடையவேண்டிய நன்மைகளைத்தினுக்கும் ஏதுவாகி நிற்கும் சிறப்பினையுடையது. மேலும் சிவன் எனுஞ்சொல். "தெய்வம் வேறுளதென்பவர் சிந்தனை நைவரென்பது நற்பர தற்பர சைவசிற்சிவனேயுனைச்சார்ந்தவர் உய்வரென்பதும் யானுணர்ந்தேனுற்றே" [தாயுமானார்]

"சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்றிட சிவகதி தானே"

என்று திருவாய் மலர்தருளினார் திருமூலநாதரும்;

சி- என்பது சூரியகலை வ- என்பது சந்திரகலை என்றும் யோகநூல்களும் கூறும். சிவ என்பது தன்னகத்தே அடங்கியுள்ள ஒரு பெருஞ்சொல்லாதலால் அதுவே சிறப்பாகச் சைவம் எனப்பெயர்பெற்றது.

நம் தமிழர் கண்ட சைவசமயம் பின்னர் அவதரித்தவர்களான திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி நாயனார் மாணிக்கவாசகனார் சேக்கிழார் திருமூலர் முதலிய சைவப்பெரியார்களால் வளர்க்கப்பட்டது. முதல் நால்வரை சமயகுரவர்கள் எனப்போற்றிவருவதும் உணர்க. [தொடரும்]

# நாயகி நாயக நெறி.

[திருமுருக. கிருபானந்தவாரி]

---

இறைவனை அடைகின்ற நெறிகள் நான்கு:-

1 தாச நெறி — ஆண்டானடிமைத்திறம்
2 சற்புத்ர நெறி — தந்தையும் மைந்தனுமாக நிற்றல்
3 தோழ நெறி — தோழமை கொண்டு வணங்குதல்
4 நாயகி நாயகநெறி — இறைவனைக் கணவனாகக்கொண்டு ஆன்மா நாயகியாக நின்று அன்பு செய்தல்,

இந்த நான்காவது நெறிதான் சாலவும் சிறந்தது.

ஆண்டான் அடிமைத்திறத்திலே சிறிது அச்சம் நிற்கும். அதனை விட நெருங்கிய தொடர்பு இறைவனைத் தந்தையாகக் கொண்டு தன்னை மைந்தனாக நின்று அன்பு செய்யும் சற்புத்ர மார்க்கத்தில் உண்டு. ஆண்டான் அடிமைத் திறத்தில் இறைவன் தந்த ஊதியத்தை மட்டும் பெறமுடியும். சற்புத்திர மார்க்கத்தில் இறைவனுடைய செல்வம் அத்தனையும் மைந்தனுக்கு உரியவை தானே'

இந்த சற்புத்திர நெறியினும் அதிக தொடர்புடைய தோழமை நெறி, மைந்தனைக்காட்டிலும் தோழன் அதிகமாக நெருங்கிப் பழகுவான்.

இந்த தோழமை நெறியினும் மிகமிகத் தொடர்புடையது. நெறி சன்மார்க்கம். அதாவது நாயகிநாயகநெறி. தோழனுடையவுடமைகளை யெல்லாம் தோழன் அனுபவிக்கலாம். ஆனால் தோழனையே அனுபவிக்க முடியாது.

நாயகி நாயக நெறியில் கணவனுடைய உடைமைகளை அனுபவிப்பதோடு கணவனையே அனுபவிக்கும்வாய்ப்பு உண்டு. நாயகியும் நாயகனும் இரண்டற்று ஒன்று பட்டு உவக்கும் இன்பம் வேறு எதனிலும் எய்தாது;

இந்த நாயகி நாயகநெறியே நான்காவது நெறி. இத்திருநெறியை நன்கு விளக்கியருளிய வித்தகர் மாணிக்கவாசகப் பெருமான், அவர்வழிவந்த இராமலிங்க அடிகளும் இந்நெறியைப்பல வாறாக பன்னிப் பன்னிப் பாடி பரம சுகம்பெற்றார்.



"கண்ணுறங்கேன் உறங்கினுமென் கணவரோடு கலங்கும்
கனவன்றி யலையென்றேன் அதனாலோ அன்றி
எண்ணுறங்கா நிலவிலவர் இருக்குமிடம் புகுவேன்
என்னுரைத்தேன் இதனாலோ எதனாலோ அறியேன்
பெண்ணடங்காள் எனத்தோழி பேசிமுகங் கடுத்தாள்
பெருந்தயவால் வளர்த்தவளும் வருந்தி அயலானாள்
மண்ணடங்காப் பழிகூறி மற்றவர்கள் இருந்தார்
வள்ளல்நட ராயர்திரு வுள்ளம் அறிந்திலனே"

—இராமலிங்கஅடிகள்.

இந்த உயர்ந்த நாயகி நாயக நெறியில் பரமகுருநாதராகிய அருணகிரிநாதர் பெருமான் பற்பல திருப்புகழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார். அவற்றுள் சில அடிகள் பின்வருகின்றன.

"நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறு
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே"

"வாரிமீதே யெழு திங்களாலே
மாரவேளேவிய அம்பினாலே
பாரெலாமேசிய பண்பினாலே,
பாவியே னாவிம யங்கலாமோ"

"அகுதி இவள் தலையில்விதி யானாலும் விலகரிது
அடிமைகொள உனதுபரம் ஆறுத ஒருதனிமை
அவளையணை தர இனிதி னேகார பரியின்மிசை வரவேணும்"

"தெருவினில் நடவா மடவார் திரண்டொறுக்கும் வசையாலே
தினகர னெனவேலையிலே சிவந்துதிக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா மதன்தொடுக்கும் கருணையாலே
புளகித முலையாள் அலையா மனஞ்சலித்தும் விடலாமோ"

இறைவனைக் கலந்து இன்புற விளைத்த ஆன்மா; ஞானக்காதல் மேலீட்டினால் உள்ளம் உருகும், "அவருடைய கருணையை நோக்கி அசரங்கள் கூட உருகுகின்றனர். அறிவுள்ள தன் உள்ளம் உருகுகில்லையே" என்று கூறி உருகுகின்றார் இராமலிங்க அடிகள்;—

கள்ளுருகு மலர்மணம்போல் கலந்தெங்கு
நிறைந்தோய் நின் கருணைக்கந்தோ
முள்ளுருகும் வலியபராய் முருடுருகும்
உருகாத முறைசேர் கல்லும்
வள்ளுருகும் மலையுருளும் மண்ணுருகும்
மாமுருகும் மதியிலேன் றன்
உள்ளுருகும் வகையிலையென் செய்தேன் நான்
ஏன் பிறந்தேன் ஒதியனேனே.

நெருப்பைக் கண்டவுடன் நெய்யுருகுவதுபோல இறைவனுடைய திருவடிமீதுள்ள பக்தியினால் உள்ளம் உருகுதல் வேண்டும். இனி அதிக தீயின் வெப்பத்தினால் நெய்யிருந்த பாத்திரங்கூட உருகிவிடும்: அதுபோல் அளவற்ற பக்தியினால் உள்ளத்தைத் தாங்கிய இந்த உடம்பும்உருகிவிடும்.

"உன்னுடைய அழகையும் அருளையும் உன்னுகின்ற போது உள்ளம் உருகுவதோடு அமையாமல் உடலும் உருகுகிறது" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கூறுகின்றார்.

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்
டுடலெனக் குருகு மாலோ என்செய்கேன் உலகத்தீரே.

———



# பெயரும் - புகழும்.

(திருப்புகழ்மணி)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே.

என்று அருணகிரி வள்ளல் உபதேசித்தார். கபடத்தை ஒழித்து மெய்யன்பினால் முருகன் தாளை நாடு என்றார். ஆசைகளாகிய வினையை விட்டொழி என்றார். மண், பெண், பொன் முதலியவைகளை நாடும் மனம், தான் உயிருடன் வாழும் வரையில் மட்டுமன்றி, உயிர் பிரிந்த பின்னர் தன்னைப் பிறர் நினைக்கவும் போற்றவும் கொண்டாடவும் வேண்டுமே யென்ற கவலையுறுதல் மிகவும் வியப்பான காரியம்.

கண்ணெதிரில் பெருமக்களும் சிறுமக்களும் பல உயிர்களும் தனமும் மற்றெல்லாம் காலம்எனும் பெருவெள்ளத்தில் அழியக் கண்டும், அவைகளின் ஞாபகம் அறவே மறையக்கண்டும், உண்மையை உணர்ந்தான் அல்லன் மானிடன். தன் ஞாபகம் மறவாதிருக்க, உருப்படங்கள் எழுதியும், உருஆக்கங்கள் நிலைநிறுத்தியும்; வில் (WILL) மூலமாய் தன் பேர் நிலையுற்றிருக்க அநேக ஸ்தாபனங்கள் நிறுவியும், சமாதிகள் ஏற்பாடு செய்தும் துன்புறுகின்றான். காலம் எனும் கொடும்வெள்ளம் இவைகளை யெல்லாம் அழித்தே செல்லுகின்றதை உற்று முன் பின் நோக்கிப் பார்த்தால் யாவரும் அறிவார்.

இன்றைக்கிருந்து நாளை மறையும் பெயரின் தன்மை இப்படியிருக்க, புகழுக்காக எவ்வளவு பொறாமை, துக்கம், கலகம், துன்பம் உலகத்தில் காண்கின்றன. ஆகவே, 'எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா' என்று பாடினார், பக்தியில் ஈடுபட்டு அன்புறும்தொண்டர்கள் நிலையை அப்பர்ஸ்வாமிகள் உபதேசிக்கும்பொழுது, :'தன்னை மறந்தாள், தன்நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் தலைவன் தாளே" என்றார். பேரும்,

# திருவள்ளுவர் திருநாளும் அதனைக்கொண்டாடும்முறையும்

[பண்டிதர் கா, பொ, இரத்தினம் எம். ஏ., பி. ஓ எல்.]
தமிழ் மறைக் கழகத் தலைவர்

---

**வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக யாம் கொண்டதற்குரிய காரணங்களை அறிதற்கு அன்பர்கள் சிலர்விரும்புகிறார்கள். ஆதலினால் முதலிற் சுருக்கமாகச் சிலகூறுதும்.**

திருவள்ளுவர் பெருமான் இவ்வுலகிற்றோன்றிய நாளையோ, 'பேரா இயற்கைப்பெரும்பேறெய்திய' நாளையோ அறிதற்குப் பொருத்தமான சான்றுகள் இல்லை. அவர் மறைந்தநாளைச்சிலர் மாசி உத்தரமென்றும், வேறுசிலர் வைகாசி அனுடம் என்றுங் கருதி இவ்விரு நாட்களையுங்கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் ஒருநாளை உலகம் முழுவதுங் கொண்டாடச் செய்வதோடு, அந்த நாளைத் தமிழ்மக்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலும்

---

முற்பக்கத்தொடர்

பேரின் பெருமையும் ஈசன் விலாசமே என்ற அப்பர் பாடியது காண்க. " பேராகி பேருக்கோர் பெருமையாகி ........சென்றடிகள் நின்றவாறே" தன்னை மறந்த நிலையை குறிப்பாய்க் கொண்ட பக்தர்களுக்கு, தன்பின் தன்பேர் நிலைத்திருக்க நாடும் கருத்துதான் வருமோ? சித்தர்கள் வற்புறுத்துகிறார்கள். "தன்னை மறந்து தலைவாசல் தாள்போட்டு; உன்னை நினைந்து உறங்குவது எக்காலம்," "தன்னைமறந்து தலைத்த நிலைமறந்து, கண்மறந்து கதி பெறுவது எக்காலம்" எல்லாம் ஈசன் செயல் என்ற திண்மையில் ஈடுபட்டபக்கர்களுக்கு, தங்கள்பேர், பெருஞ்சீர், போற்றும்புகழ் இவையெல்லாம் குறியில் நில்லாவாம். ஆகவே பிறந்தவாழ்க்கையின் கொள்கைதான் என்னவோ! இறந்த இடம் பேசவது:=

"என்னை மற இறையை நினை
அன்பால் சேவைசெய்
இதுவே போற்றும் பூஜை"

---



கொண்டாடவுஞ் செய்யவேண்டும் என்று எமது தமிழ்மறைக்கழகம் முடிவுசெய்தது. இதனாலே இவ்விருநாளிலே பொருத்தமானதொரு நாளை அறிவிக்கும்படி சங்கங்கள் சிலவற்றையுங் கேட்டோம்,

திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்புதற்குப் பல்லாறுனும் தொண்டுசெய்துவரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு வ. சுப்பையாபிள்ளை அவர்கள் பின் வருமாறு எழுதினார்கள். "அவர் (திருவள்ளுவர்) திருநாள் வைகாசி அனுடம் என்பதுதான் மறைமலை அடிகள் போன்றார் கருத்து. அவ்வண்ணமே எங்கள் பஞ்சாங்கத்தில் வெளியிட்டு வருகிறோம். அதைப்பார்த்து வெளியார் சிலர் தங்கள் பஞ்சாங்கத்திலும் அவ்வாறே வெளியிட்டு வருகின்றனர்." திருவள்ளுவர் ஆண்டினையே தமிழர்கள் கைக்கொள்ளவேண்டுமெனக்கூறி அதனை நிலைநாட்டிய பெருஞ்செயலாளர் மறைமலை அடிகள் என்பதைத்தமிழ் அறிஞர் யாவரும் அறிவர். மேலும், மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோவிலிலும் வைகாசி அனுடத்தன்றே திருவள்ளுவருடைய நாள் விழாவை [குருபூசையை] நடத்துகிறார்கள். பல வருடங்களாக இந்தியாவிலுள்ள திருவள்ளுவர் கழகங்கள் பல இந்நாளையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருகின்றன. இக்காரணங்களாலேயே வைகாசி அனுடத்தை யாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட முடிவு செய்தோம்.

அன்பர்கள்சிலர். இந்த இருநாளையுங்கொண்டாடினாலென்ன என்றும் இவற்றுள் ஒருநாளை அவர் தோன்றியநாளாகவும். மற்றதை மறைந்த நாளாகவும் கொள்ளுதல் கூடாதோ? என்றும், இந்த இருநாட்களை விட்டுவிட்டு, வேறொருநாளைக் கொண்டாடத் தொடங்கினால் என்ன? என்றும், வைகாசி மாசத்தில் ஒரு நட்சத்திரத்தை ஏன் கொள்ளவேண்டும், ஒரு திகதியைக்கொண்டாலென்ன? என்றும் திருயள்ளுவர் ஆண்டைத், தைமாதம் முதலாம் நாளிலிருந்து கணிக்கிறோம். ஆதலின் அந்த நாளையே கொண்டாடினாலென்ன? என்றும் இன்னும் பலவாறு எழுதியுளர். இவ்வாறு பல்வேறு கருத்துக்களை அறிவித்தாலும் யாம்குறித்த நாளைத் தாமும் கொண்டாடுவதாகவும், எமது முயற்சிக்கு

ஆக்கமும் ஊக்கமும் நல்குவதாகவும் அவர்கள் யாவரும் எழுதியுளர். அவர்களுடைய ஒற்றுமைப் பண்பும், திருக்குறட் பற்றும் கடமையுணர்ச்சியும் எமக்கு ஊக்கமளிக்கின்றன. யாம் குறித்த நாளை ஆதரித்து எழுதிய நண்பர்களும் பலராவர், இவர்கள் யாவருக்கும், எமது அறிக்கையினை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் நன்றிகூறுகிறோம். எல்லோருக்கும் உகந்ததாக நாளைத்தெரிவுசெய்தல் முடியாதென்பதைக் காட்டவே அன்பர்களின் இக்கருத்துக்களை ஈண்டுக் குறிப்பிட்டோம். இனி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மகா சன்னிதானம் திருவார் திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரியசுவாமிகள் எமக்கு அனுப்பிய கடிதத்தில் உள்ள ஒரு பகுதியினைக் கீழே காண்க.

“திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்குரிய காலக்குறிப்பிலே நாம் அதிகமாகக் கவனஞ்செலுத்தவில்லை, ஆண்டுக்கு ஒருமுறை எப்பொழுதோ ஒரு நாள் திருவள்ளுவரை நினைவுகூர்ந்து அப்பெருமகனார் தம் அறவுணர்ச்சிகளைமக்களுக்கு உணர்த்தவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோளாக இருந்தது. ஆதலால் தாங்கள் முடிவுசெய்த குறிப்புப்படியே வைகாசி அனுடத்திருநாளில் கொண்டாடுதற்குத் தடை இல்லை; ஆனால் இந்த ஆண்டிலே மாசித்திங்களில் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்றுவிட்டமையால் இந்த ஆண்டு மாசித் திங்களில் கொண்டாடுகிறோம். தங்களையொட்டி வைகாசி அனுடத்திலும் கொண்டாடுகிறோம். அடுத்த ஆண்டிலிருந்து போறிஞர்கள் முடிவுப்படியே வைகாசி அனுடத்தில் விழாவைக் கொண்டாடுகிறோம், அன்புணர்ச்சி ஒன்றின் காரணமாகவே விழாவைக் கொண்டாடுவதாற் காலத்திற்குரிய சிந்தனையை நாம் செய்யவில்லை. தமிழ் நாடு மட்டுமன்றி வையகமெங்கும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட முயற்சிசெய்வது, பெரிதும்போற்றுவதற்குரியசயல், ஒவ்வொருவர் வீட்டிலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுவதும் இன்றியமையாத ஒன்றுதான்,

மகா சன்னிதானம் அவர்களின் குறிக்கோளே நமது கழகத்தின் குறிக்கோளாகும். அன்புணர்ச்சி ஒன்றின்காரணமாக' த்திருக்குறளைப் போற்ற விரும்பும்



மக்கள் யாவருங்கொள்ளத்தக்க சிறந்த குறிக்கோள் இஃதொன்றேயாகும், ஆதலின் தமிழ் மக்கள் யாவரையும் மகா சந்நிதானம் அவர்களைப்போலக் காலக் குறிப்பிலே கருத்தைச் செலுத்தாது இந்நாளைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தநாளுடன் மாசி உத்திரத்தையும் வேறுநாட்களையும் விரும்புகிறவர்கள் நன்கு கொண்டாடுக.

ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடவேண்டும் என்று யாம் கேட்டுக்கொண்டதைப் போற்றியும், கொண்டாடும் முறைகளைக் குறித்தும் அன்பர்கள் பலர் எமக்கு எழுதியுள்ளர். எல்லாச்சமயததவரும் அன்பினலொன்று பட்டு இன்பமாகக் கொண்டாடவேண்டுமென்பதே எமது வேண்டுகோள், தம்முடைய வணக்கமுறைகளையோ கொள்கைகளையோ தழுவித் தமது வீடுகளிலேகொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறே கொண்டாடுக.

செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 27–பரல் 6–இல் [தை 53]வெளிவந்த “திருக்குறளைப் பரப்புஞ் சீரிய வழிகள்” எனுங்கட்டுரையினையும் அன்பர்களுக்கு நினைவூட்டுகிறோம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மகாசன்னிதானம்அவர்கள் கருத்தையும் இங்குத்தருகிறோம். ”விழாத் திருநாளன்று இல்லங்களை மெழுகிக் கோலமிட்டு, புனதப்படுத்தி: மாவிலைதோரணம் முதலியவற்றால் அலங்கரித்துப் புனிதமான ஒரு இடத்தில் நல்லதொரு ஆசனத்தில் திருவள்ளுவர் திருமறையை வைத்து அவ்வாசிரியப் பெருமசனைப் பற்றிய பக்திப்பாடல்களை தினந்தோதி, அந்நூலின் கோட்பாடுகளையும் ஓதி, மலர், தூபம், தீபம் முதலியனகொண்டு பூசித்துப்பின்னரியன்ற அளவு ஒரு சிலபாடல்களைச் சுற்றம் சூழ இருந்து ஓதி அமைதல்வேண்டும், பின்பு சமுதாயத்தை வாழ்விக்கும் சிறந்த பணிகளுள் ஒன்றாகிய சிலருக்கு அன்னமிடல், இத் திருத்தொண்டினை அவரவர் பொருள் நிலைக்கேற்பச் செய்தல்”

கடைசியாக வள்ளுவர் தம் தமிழ்மறையினை ஆதாரமாகக் கொண்டு எல்லார்க்கும் பொதுவான சிலமுறைகளையும் குறிப்பிடுகிறோம்.

“புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்”

திருநாளன்று காலையிலே வீடுகளை மரபு முறைப்படி அழகுபடுத்துக; வீட்டிலுள்ளார் யாவரும் நீராடி நல்லுடைமுதலியன அணிந்து உள்ளத்தூய்மை உடையராகுக.

"உள்ளுவது எல்லாம், உயர்வு உள்ளல் மறந்து
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

பின்னர் திருக்குறளை உவகையுடன் எடுத்துப் பணிவுடன் அறன்வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை முதலிய அதிகாரங்களைப் படித்துணர்க. அவற்றைக் கேட்போர் யாவருக்கும் அவற்றின் பொருளை விளக்குக. அன்பைப் பெருக்கி அருளை வளர்த்து அறநெறியிலே வாழுதற்கு முடிவுசெய்க.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

திருவள்ளுவ மாலைப்பாடல்களையும் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிய பிற பாடல்களையும் உரைகளையும் படித்தும் இசைப்பாடல்களைப் பாடியும் பாடுவித்தும் மகிழ்க.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

கடைசியாக விருந்தோம்புதல் பகுத்து உண்டு பல் உயிர்களையும் ஓம்புதல் முதலியன செய்க.

காலையிலே வீடுகளிலே கொண்டாடிய பின்னர் மாலையிலே ஒவ்வொரு ஊரிலுமுள்ள கழகங்கள் சபைகள் சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவிலே திருக்குறள் வகுப்புக்கள் - சொற்பொழிவுகள் - பேச்சுப்போட்டிகள்—இசைவிருந்துகள் நாடக அரங்குகள் முதலியவற்றை நடத்துக. திருக்குறள் மாநாடு-திருவள்ளுவர் விழா முதலியனவற்றையும் நடத்தலாம். இவ்வாண்டிலே திருவள்ளுவர் திருநாள் வைகாசித்திங்கள் 15ம் நாளாகிய வியாழக்கிழமை 28-5-53 என்பதை நினைவூட்டுகிறோம்.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

தமிழ் மறைக் கழகம்,
44-33ஆம் ஒழுங்கை கொழும்பு 6

---



ஓம்

# புது வருட வாழ்த்து.

ஐயன்மீர்!

புதிய விஜய வருடம் பிறக்கும்போதே ஜோதி சோபனஞ் சொல்லிக்கொண்டு உங்கள் கைக்கு வருகிறது. புதுவருடத்தில் வாழ்க்கையின் பலதுறைகளிலும் வெற்றி யுண்டாக வாழ்த்துகிறோம். மேலுறையைச்சுற்றியவுடனே மேலட்டையில்

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்

காட்சிகொடுக்கிறார், அவரே உங்களுக்கு வாழ்த்துக்கூறுகின்றார்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

## அன்பர்களுக்கு

அன்பர்களிற் சிலர் தமது விலாச மாற்றங்களை உரியகாலத்திலே அறிவிக்காமையால் ஜோதி அவர்கள் கைக்கெட்டுவதில்லை. சிலருடைய சிலருடைய ஜோதி திரும்பிவந்து விடுகிறது. திரும்பிவரும்போதும் நாம் பணம் கொடுத்தே சோதியைப் பெறவேண்டியுள்ளது. இதனால் பலவித நஷ்டங்கள் ஏற்படுகின்றன, ஜோதி அன்பர்கள் விலாசமாற்றங்களை மிகக்கவனமாக அறிவிக்க வேண்டுகிறோம். இந்தியாவிலுள்ள அன்பர்கள் பணமனுப்பியவுடன் காரியாலயத்திற்கு பணமனுப்பிய விபரம்பற்றி ஒரு கடிதம் எழுதவேண்டுகிறோம்.

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி இலங்கை.

Ragistered at the G-P-O as a News Paper H-C 59/300

# ஸ்ரீராமக்கிருஷ்ண விஜயம்.

[1921-ஆண்டிலிருந்து வெளிவருகிறது]

வருடசந்தா ரூபா 4/- தனிப்பிரதி சதம் -/50

ஒவ்வொரு தொகுதியும் தையாகத்திலிருந்து வெளிவருகிறது.

சந்தா தை அல்லது ஆடி மாதத்திலிருந்து தொடங்கலாம்.

ஸ்ரீஇராமக்கிருஷ்ண மடம்

மைலாப்பூர் சென்னை

# நால்வர் படங்கள்

வேண்டிய அளவுகளில் நால்வர் படங்கள் தயாராகி உள்ளன,
விபரங்களுக்கு பின் வரும் விலாசத்திற்கு எழுதுக.

நால்வர் மடாலயம்

பேரூர்போஸ்ட் கோயம்முத்தூர் தென்னிந்தியா,

## சரவண எழுத்துப் படங்கள்.

ஷத்கோண சண்முகப்பிரகாச படம்

இவ்விருபடங்களும் 20:14 சைஸ், 12 வர்ணங்கள் கொண்டதாய்
அழகிய முறையில் வெளிவந்துள்ளன.
இந்துக்கள் ஒவ்வொருவரதும் பூஜை அறைகளிலும் வைக்கத்தகு
ந்தது. சித்திரவிளக்கப் புத்தகங்களுடன் கூடியது.

படம் ஒன்று 1ரூபா 8அணுவாகும்

கிடைக்குமிடம்;-

பாலதண்டபாணி பிக்சர் கவுஸ்

குமாரவீதி திருப்பூர் T-I-S

சரவண அச்சகம்-நாவலப்பிட்டி